இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023
பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

அற இலக்கியப் பதிவுகளில் காமன் என்னும் தொன்மம் Khaman Myth in Moral Literature

முனைவர் மூ. பாலசுப்பிரமணியன் | Dr. M. Balasubramanian

இணைப் பேராசிரியர், தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் 608 002. Associate Professor, Tamil Studies & Research, Annamalai University, Annamalai Nagar 608 002, nellaibaalaa@gmail.com, 9488013050

DOI: 10.5281/zenodo.10222560

ஆய்வுச்சுருக்கம்: பாடுபொருளால் அற இலக்கியங்கள் என வரையறுக்கப்படும் இலக்கியப் பனுவல்கள் களப்பிரர் காலத்தில் மிகுதியாகத் தோன்றியுள்ளன. இவ்விலக்கியங்களில் பெரும்பாலும், சமண பௌத்தக் கருத்தியல்களைக் காண முடியும். அவ்விலக்கியங்கள் நிலையாமைத் தத்துவத்தை முன்னிறுத்தி; சிற்றன்பச் செயல்களைக் கண்டிக்கின்றன. காமம் என்னும் காதல் உணர்வைத் தீமை விளைவிக்கும் கருவியாகக் கருதியுள்ளன. காமத்தைத் தெய்வமாக உருவகப்படுத்திக் காமனாகப் பார்த்த சங்க இலக்கியங்கள் போலல்லாமல், காமமாகவே கருதி வெறுத்து ஒதுக்கியுள்ளன. இயற்கையான காம நடவடிக்கைகளைக் கூட வெறுக்கின்றன. சங்க இலக்கியங்களை ஒப்பிடுகையில் ‘காமன்’ என்னும் தொன்மத்தை அற இலக்கியங்கள் மிகக் குறைவாகவே கையாண்டுள்ளன.

Abstract: Literary works, defined as moral literature through poetry, flourished during the Kalaprara period. These writings often embraced Jain and Buddhist ideologies, prominently featuring the theory of impermanence. Within these texts, there is a distinct condemnation of sexual activities, portraying the feeling of love, known as Kama, as an instrument of evil. In contrast to Sangam literature, which revered Kama as a deity (Kaman), this literature deemed it as Kama and rejected it outright. There is a notable aversion even to natural sexual activities. Unlike Sangam literature, which extensively explored the myth of 'Kaman,' the literature of this period has dealt with it sparingly, particularly in the context of moral teachings.

திறவுச் சொற்கள் (Keywords): காமன், காதல், மன்மதன், காமவேள், காமம், அற இலக்கியங்கள், சங்க இலக்கியங்கள், சமணம், பௌத்தம், சைவம், வைணவம், வைதீகம், நாட்டுப்புற நம்பிக்கை, நாட்டுப்புற வழிபாட்டு மரபு, Love, Kaman, Manmathan, Kamavel, Kamam, Kalapira Era, Moral Literature, Sangam Literature, Jainism, Buddhism, Saivism, Vaishnavism, Vaidika, Folk belief, Folk worship tradition

முன்னுரை

காதல் எல்லா உயிர்களுக்குமானது; இனப்பெருக்கத்தை நோக்கமாகக் கொண்டது. அக்காதல் உணர்வுகளுக்கு அளிக்கப்படும் மதிப்பே ஓர் இனத்தின் தனித்த அடையாளமாகவும் உயர்ந்த பண்பாடாகவும் கருதப்படும். இந்தியச் சமூகம் காதல் என்ற உணர்வு, ‘காமன்’ என்னும் தெய்வத்தால் உருவாகிறது என்று நம்புகின்றது. காமத்தைத்

தெய்வமாகக் கருதும் அச்சமூகம், காமம் மனித நடத்தைகளுக்கெதிரானது என்றும் சிற்றின்பம் என்றும் குற்றமும் சாட்டுகின்றது. காதல் உணர்வைக் கொண்டாடி, போற்றி வாழ்ந்த தமிழர்கள், அதனைத் தெய்வமாகவும் கருதியுள்ளனர். உலகின் அனைத்துச் செயல்பாட்டிற்கு ஏதோ ஒரு தெய்வம்தான் காரணம் என நம்பும் நம்மவர்கள், காமத்திற்கும் தெய்வம்தான் காரணம் எனவும் நம்பியுள்ளனர். வரன்முறை மீறிய காமம் சமூகத்தில் விளைவுகளை ஏற்படுத்திய போது, மனிதனின் ஆசைகளைக் கட்டுப்படுத்த முனைந்த தத்துவவாதிகள், காதல் என்னும் காமத்தை வெறுத்து ஒதுக்கியுள்ளனர். அதனால், காமன் இந்திரனாக்கப்பட்டுள்ளான். மேலும், காம உணர்வைச் சிற்றின்பம் என்ற பெயரில் இந்தியச் சமயங்களும் கடிந்துரைத்து, இந்திரனையும் வழிபாடு மரபிலிருந்து அகற்றியுள்ளன. என்றாலும், காமத்தைத் தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கம் இருந்து வருகிறது. இங்ஙனம் காமன் குறித்த தொன்மக் கருத்தியலையும் காமத்தையும் அற இலக்கியம் பாடுமாற்றை இக்கட்டுரை ஆராய்கின்றது.

காமன் – தொன்ம விளக்கம்

மக்கள் நிராசையினால் அகத்தூண்டுதலுக்கு ஆட்பட்டுப் புனைந்துரைகளின் வழிக் கற்பனைப் பாத்திரங்களை உருவாக்குவர். அப்பாத்திரங்களின் இறுகிய வடிவமே தொன்மங்கள் எனப்படும். இயற்கையிறந்த நிகழ்வுகளாலும், மீவியற் கற்பனையாலும் தொன்மங்கள் தோற்றம் பெறுகின்றன. வீரர்கள், தலைவர்கள், அரசர்கள், தெய்வங்கள், புராணப் பாத்திரங்கள் குறித்த பழமரபுக் கதைகள் தொன்மங்களாக உருப்பெற்றுள்ளன. அங்ஙனம், காம உணர்வுகளின் வெளிப்பாடாய்த் தோன்றிய காமனைத் தொன்மமாக நோக்கலாம். இயற்கையாக மனிதனில் உருவாகும் காம உணர்வை, தெய்வம் உருவாக்குகிறது என்று இந்தியர்கள் நம்பியுள்ளனர். காமத்தை உருவாக்கும் தெய்வத்தைக் ‘காமன்’ என்றனர். காமன் தோற்றம் குறித்துப் புராணங்கள் பல கதைகளைக் கூறியுள்ளன. தர்மனின் மகன் என்று மகாபாரதத்தின் ஆதிபருவம் (பாகம் 66) கூறுகின்றது. பிரம்மனிடமிருந்து தோன்றியதாகவும், திருமாலின் மகன் என்றும் சில புராணங்கள் கூறுகின்றன. காமன் அழகான இளைஞனாகவும், அவன் கரும்பு வில்லைக் கொண்டு, மலர் அம்புடன் கிளி வாகனத்தில் வலம் வருவதாகவும், அவன் மனைவி ரதி என்றும் கூறியுள்ளன.

ஆசைகள் இல்லா மனிதனில்லை. மனிதனிடம் இயல்பாக எழும் காம உணர்ச்சியைப் புராணங்கள் தெய்வத்தின் செயல் எனப் புனைந்துரைக்கின்றன. அதனாலேயே, அத்தொன்மத்தைக் ‘காமன்’ என்றனர் போலும். காமனை, ‘மதனன், மன்மதன், மாரன், ப்ரத்யூமனன், மீனகேதனன், கந்தரவன், தார்பகன், அனங்கன், காமன், பஞ்சாக்ஷரன், சாம்பராரி, மனசிஜன், குசுமேசு, அனன்யஜன், புஷ்பதன்வன், ரதிபதி, மகரதுவாஜன், ஆத்மபூஷன், இரஜன், இம்சன், கிங்கரன், அபிரூபன், ருதுகாலகேலன், காஞ்சனன், ரமணன், திபாகன், மதுதீபன், சமந்தகன், முகிரன், ருபஸ்த்ரன், வாமன், புஷ்பகேதனன், மகரகேது, ரதிநாயகன், ரகுவர்த்தனன், சம்சரகுரு, கடாயிதுனு, மபதியன், மாயன்’ எனப் பல பெயர்களில் அப்புராணங்கள் அழைக்கின்றன. இப்பெயர்களின் வழி இந்தியச் சமூகத்தில் காமன் தொன்மம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை விளங்கும்.

காமம் இயற்கை என்றாலும், ஞானம் பெறுவதைத் தடுக்கும் பகையாகக் கருதி காமனைச் சத்ருவாகவே புராணங்கள் சித்திரித்துள்ளன. யோகத்திலிருந்த சிவனின் மீது மலரம்பு எய்தமையால், அவரின் கோபத்திற்குக் காமன் ஆளானான் என்றும், சிவன் காமனைத் தனது நெற்றிக்கண்ணால் அழித்தான் என்றும் கூறுகின்றன. அதனால் சிவபெருமான், ‘காமகோபன், காமனைக் காய்ந்த கண்ணுதற் கடவுள்’ என்று போற்றப்படுகிறார். காமன் அழிப்பைச் சைவத் திருமுறைகள் ‘காமதகனம்’ என்று

பலவிடங்களில் பேசியுள்ளன. புராண இதிகாசங்கள் மட்டுமின்றி காமன் குறித்த தொன்மக் கதைகள் மக்கள் வழக்கிலும் காணப்படுகின்றன. நாட்டார் காமன் வழிபாட்டை மக்கள் செல்வம் குறித்த நம்பிக்கையோடு இன்றும் மேற்கொண்டு வருவதைக் காண முடிகின்றது.

காமன் குறித்த இலக்கியப் பதிவுகள்

இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் காமன் குறித்த கதையாடல்களும், புராண, இலக்கியக் குறிப்புகளும் காணக் கிடைக்கின்றன. தமிழின் பண்டைய இலக்கியங்கள் தொடங்கி நவீன இலக்கியங்கள் வரை 'காமன்' பல்வேறு பெயர்களாலும் தொன்மக் கதைகளாலும் பேசப்பட்டிருக்கிறான். காமன் குறித்த இலக்கியப் பதிவுகள் காமத்தைப் போற்றும் விதமாகவும், தூற்றும் விதமாகவும் அமைந்திருக்கின்றன. காதலைக் கொண்டாடிய சங்க இலக்கியங்கள், காதலின் மேன்மையை உணர்த்த காமன் தொன்மத்தைக் கையாண்டுள்ளன. பண்டையக் காலத்தில் காமனுக்கு விழாவும் எடுக்கப்பட்டுள்ளது. அதனை, 'உள்ளி விழா' என்ற பெயரில் கொண்டாடியுள்ளமையை,

"... ... ... கொங்கர்
மணி அரையாத்து மறுகின் ஆடும்
உள்ளிவிழவு அன்ன" (அகநானூறு, பா. 368)

என்ற அகநானூற்று அடிகள் மெய்ப்பிக்கின்றன. இறையனார் களவியல்,

"கருவூர் உள்விழாவே" (இறையனார் களவியல் உரை, நூ. 16-17)

என்ற குறிப்பைத் தருகின்றது. அவ்விழா நடைபெறுகிற போது அரண்மனைகளில் காமனுக்குரிய மீன்கொடி ஏற்றியிருந்தமையை மற்றொரு அகநானூற்றுப் பாடல் பதிவு செய்துள்ளது. அதனை,

"நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆல முற்றம் கவின்பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழில்மனை மகளிர்
கைசெய் பாவைத் துறைக்கண் இறுக்கும்
மகர நெற்றி வான்தோய் புரிசைச்
சிகரம் தோன்றா சேணுயர் நல்இல்" (அகநானூறு, பா.181)

என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன. மேற்கண்ட பாடலால் தமிழ்ச் சமூகத்தில் காமன் கொண்டாடப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. கலித்தொகையின்,

"நான்மாடக்கூடல் மகளிரும் மைந்தரும்
தேன்இமிர் காவில் புணர்ந்திருந்து ஆடுமார்,
ஆனா விருப்போடு அணி அயர்ப, காமற்கு
வேனில் விருந்து எதிர்கொண்டு" (கலித்தொகை, பா.92:65-68)

என்னும் பாடலடிகள் காமனுக்கு இளவேனில் காலத்தில் விழாக் கொண்டாடியதைப் புலப்படுத்துகின்றன. மேலும், கலித்தொகையின், 94:33, 108:4, 109:19,147:59&60 அடிகளும், பரிபாடலின் 8:119, 10:97, 11:123, 18:28 அடிகளும் காமன் பற்றியத் தொன்மத்தை விளக்குவனவாக உள்ளன. காமனின் மனைவி ரதியைப் பற்றி,

"இரதி காமன், இவள் இவன்' எனாஅ
விரகியர் வினவ, வினா இறுப்பொரும்" (பரிபாடல்., பா.19:48&49)

இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023
பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

என்ற பரிபாடல் அடிகளும், காமனின் தம்பியைப் பற்றி,

"மீன் ஏற்றுக் கொடியோன் போல், மிஞிறு ஆர்க்கும் காஞ்சியும்,
ஏனோன் போல், நிறம் கிளர்பு கஞலிய ஞாழலும்,
ஆன் ஏற்றுக் கொடியோன் போல், எதிரிய இலவமும், ஆங்கு," (கலி., பா.26:3-5)

என்ற கலித்தொகை அடிகளும் பேசியுள்ளன. ஒவ்வொரு மனிதனுக்குக் காதல் உணர்வை மன்மதன் என்னும் காமன் உருவாக்குவதாக அரிச்சந்திர புராணம் கூறியுள்ளது. அப்புராணம்,

"திங்கள்வெண் குடைக்கீழ்த் தென்றற் றேர்மிசை ஏறி வாரி
மங்கல முரசம் ஆர்ப்ப மகரகே தனநின் றோங்கக்
கங்குல்வெங் களிறு சூழக் கடுங்கிளிப் புரவி தூண்டி
அங்கண்மா ஞால மெல்லாம் அனங்கவேள் பவனி வந்தான்." (அரிச்சந்திரபுராணம்)

எனப் பாடியுள்ளது. மீன்கொடி தேரில் காமன் ஊர்வலம் செல்வதைச் சிலப்பதிகாரம்,

"அரையிருள் யாமத்தும் பகலும் துஞ்சான்
விரைமலர் வாளியொடு கருப்புவில் லேந்தி
மகர வெல்கொடி மைந்தன் றிரிதர
நகரங் காவல் நனிசிறந் ததுவென்." (சிலப்பதிகாரம்)

எனப் பதிவு செய்துள்ளது. கம்பராமாயணம்,

"கன்னல் வார் சிலை கால் வளைத்தே மதன்
பொன்னை முன்னிய பூங் கணை மாரியால்
என்னை எய்து தொலைக்கும் என்றால் இனி
வன்மை என்னும் இது ஆரிடை வைகுமே?" (கம்பராமாயணம்)

எனக் காமன் மலர் அன்பு பொழியும் திறத்தை விவரித்துள்ளது. இங்ஙனம் தமிழ் இலக்கியங்கள் காமனைக் கொண்டாடியுள்ளன. காமத்தைத் தரும் தொன்மமாகவே தமிழ் இலக்கியங்கள் பாடியுள்ளன. ஆனால், காலமாற்றத்தால் கொண்டாடப்பட்ட காமன் என்னும் மன்மதன் தீக்கடவுளாகச் சித்திரிக்கப்படலானான். காமத்தைக் கொண்டாட்டத்திலிருந்து சிற்றின்ப நிலைக்குத் தள்ளிய சமண, பௌத்த கொள்கையைச் சைவ வைணவ சமயங்களும் ஏற்றுக் கொண்டு காமனைக் கடிந்துரைத்தன. மேலும், வழிபாட்டு நிலையிலிருந்து அகற்றி, சிந்தனை மரபில் எதிர்மறையான பாத்திரமாகக் காமன் மாற்றப்பட்டான்.

தமிழர் வாழ்வில் காமன்

தமிழர்கள் வாழ்வியலை அகம், புறம் எனப் பகுத்துக் காதலுக்கு முதலிடம் கொடுத்துள்ளனர். அதனை, "இன்றமிழ் இயற்கை இன்பம்" (சீவகசிந்தாமணி, பா.2003) எனச் சீவக சிந்தாமணி கூறுவதன் வழி அறியலாம். மனித இயல்பான இயற்கை உணர்வுக்கு மதிப்பளித்துக் காதல் சார்ந்த திருமணங்களையே மேற்கொண்டுள்ளனர். அதனால் காமனுக்குச் சங்க காலத்தில் விழா எடுக்கப்பட்டுள்ளது. அத்தகைய காமன் விழா 'இந்திர விழா' என மாறியதை இரட்டைக் காப்பியங்கள் எடுத்தியம்புகின்றன. (சிலம்பு.1:6:1-6, மணிமேகலை. 1: 65-72) இம்மாற்றத்தை,

'காமன் விழா 'இந்திரன் விழா' எனப் பெயர் மாறியதும் அந்த விழாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. காமனுக்குப் பதிலாக இந்திரன் அவ்விழாவின் நாயகன்

> ஆனான். மழை வேண்டியும் பயிர் செழிக்கவும் என விழாவின் கருத்து கருப்பெற்றது." (எஸ்.சாந்தினிபீ, (வரலாற்றுத் துறைப் பேராசிரியர்) காமன் விழா: தமிழர்கள் கொண்டாடிய காதலர்கள் தினம், இந்து தமிழ், 14 பிப். 2019)

என்னும் கருத்தால் உணரலாம்.

ஆசையை உருவாக்கிய காமன், 'இந்திரன்' என்ற பெயரில் பெண்பித்தனாக உருவகப்படுத்தப்பட்டான். இந்திரன் ஆனதும் வழிபாட்டிலிருந்து அகற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டான். என்றாலும், கொண்டாட்ட மனநிலைக் கொண்ட தமிழர்கள், காமனைத் தொன்மமாகக் கதையாடத் தொடங்கியுள்ளனர். இலக்கியங்களும் வேறுவேறு பெயர்களில் பதிவு செய்துள்ளன. சமணம், பௌத்தம், சைவம், வைணவம் போன்ற பெரும் சமயங்கள் காமனை ஒதுக்க, நாட்டார் வழிபாட்டு மரபில் தமிழக மக்களால் வணங்கப்படலானான். காமன் வழிபாடு, 'மன்மதன் விழா, காமன் தகனம், களப்பலி, காமன் பண்டிகை' எனப் பல பெயர்களில் தை, மாசி, பங்குனி மாதங்களில் இன்றும் தமிழர்கள் வாழும் நாடுகளில் நடைபெறுவதை அறிய முடிகிறது. சிறுதெய்வ வழிபாட்டிற்குரிய மரபுகளின்படி இவ்விழாக்கள் நடைபெறுவதைக் கள ஆய்வின் வழி அறிய முடிந்தது. இவ்விழாக்கள் 'ஆடல், பாடல், பலியிடல், ஒப்பாரி, உயிர்ப்பித்தல்' என்கிற முறையில் நடைபெறுகின்றன. (பிரேம்குமார், மன்மதன் ஒப்பாரி, சென்னைப் பல்கலைக்கழகம், 2004) இவ்வழிபாடு இன்று சைவ சமயப் பின்னணியோடு நடைபெறுவதையும் காண முடிகின்றது. தமிழர்கள் வாழும் இலங்கையிலும் இவ்வழிபாடு கூத்துமுறையில் நடத்தப்படுகிறது. மலேசிய நாட்டில் 22 நாட்கள் 'காமடி திருவிழா' என்கிற பெயரில் இப்பொழுதும் நடைபெறுகின்றது. 'காமண்டி திருவிழா' என்பது மருவி 'காமடி திருவிழா' என வழங்கப்படுகிறது. (நூநவிலன், காமன் திருவிழா எனும் காமடித் திருவிழா, yal.com, June 9, 2019) இங்ஙனம் கற்பனைப் பாத்திரமான காமன் தவிர்க்கவியலா தொன்மாகத் தமிழர்கள் வாழ்வியலோடும் நம்பிக்கையோடும் கலந்துவிட்டான். காமன் வழிபாட்டின்போது, 'ஒப்பாரி, லாவணி, கணியான் கூத்து, பாவைக்கூத்து, வில்லுப்பாட்டு, தெருக்கூத்து' எனப் பல கலை வடிவங்களிலும் காமன் கதை பாடப்படுகிறது. (சதீஷ் அ., காமன் கதைப்பாடல், சென்னைப் பல்கலைக்கழகம், 2005)

பாலியல் கல்விக்கான ஏற்பாடாகக் காமன் வழிபாட்டை நோக்க முடியும். மன்மத வழிபாட்டில் ஆண்கள் மட்டும் பங்கெடுக்கும் வழக்கமும், அப்பொழுது ஆண்கள் ஆடைகளின்றி கதையாடுவதையும் கட்டுரையாளர் கள ஆய்வில் அறிந்துள்ளார். இவ்வழிபாடு மயானக் கரைகளில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. மதுரை வட்டாரத்தில் ஆண்கள் மட்டும் நடத்தும் முத்தையா, கருப்பசாமி வழிபாடுகளை மன்மத வழிபாட்டோடு இணைத்துப் பார்க்க முடியும். மேலும், பெண்கள் நடத்தும் ஔவை நோன்பு வழிபாட்டோடு காமன் வழிபாடு என்னும் மன்மத வழிபாட்டை ஒப்பு நோக்கலாம். இரண்டு வழிபாடுகளும் மக்களுக்கான பாலியல் விழிப்புணர்வாகக் கொண்டு ஆராய வாய்ப்பிருக்கிறது. இவ்வாறாகக் காமன் தொன்மம் தமிழர்களிடம் பெற்றுள்ள மதிப்பை உணரலாம். இது தமிழர்கள் காதல் உணர்வுகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துகிறது.

அற இலக்கியங்களில் காமன் என்ற காமம்

சங்க மருவிய காலத்தில் தோன்றிய நீதிநெறி சார்ந்த இலக்கியங்களை 'அற இலக்கியங்கள்' என்ற வகைமைக்குள் அடக்குவர். சங்க காலத்திலேயே அறம் சார்ந்த கருத்துகளைப் பேசும் புற இலக்கியங்கள் தோன்றினாலும், சங்க மருவிய கால இலக்கியங்களையே அற இலக்கியங்கள் என்பர். காரணம் புற இலக்கியம் பேசும் பாடுபொருள் வரையறைக்குள் அறம் வந்தாலும், சமய அடிப்படையிலான அறக்

கருத்துக்களை இவ்விலக்கியங்கள் முன்வைக்கின்றன. சமணம், பௌத்தம் செழித்திருந்த காலமாகையால், அச்சமயக் கருத்துக்களையே அறமாக இவ்விலக்கியங்கள் கட்டமைக்கின்றன. அக்காலத்திய வைதீக சமயத்தைச் சார்ந்தோரும் அறத்தை முன்னிறுத்தியே பாடினர். ஆகையால், இவ்விலக்கியங்கள் அற இலக்கியங்கள் எனப்படுகின்றன. மேலும், அவ்விலக்கிங்கள் பேசும் அறக் கருத்துக்கள், சமயங்களின் சிந்தனைகள் என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டியுள்ளது. அந்தப் பின்னணியில் காமன் என்னும் தொன்மத்தையும் அறக் கொள்கையோடு ஒப்பிட்டு நோக்கி, பாடல்களில் புலவர்கள் கையாண்டுள்ளனர். நிலையாமையை வலியுறுத்தும் அவ்விலக்கியங்கள் காமன் என்னும் தொன்மத்தைக் கடிந்தே பதிவு செய்திருக்கின்றன.

காமனின் அழகைச் சங்க இலக்கியப் புலவர்கள் உயர்ந்த நிலையில் கையாண்டுள்ளனர். அற இலக்கியப் புலவர்கள் காமனைக் காமன், மன்மதன் என்னும் பெயர்களில் ஆசையை விளைவிப்பவன் என்ற பொருளில் குறிப்பிட்டுள்ளனர். வள்ளுவம், காமத்தை உண்டுபண்ணும் காமதேவனாகிய காமன் காதலர் இருவருக்குப் பொதுவாக நில்லாது ஒருவர் பக்கம் நின்று, மற்றொருவருக்கு வருத்தத்தையும் தடுமாற்றத்தையும் தருபவன் என்கிறது. அதனை,

> "பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
> ஒருவர்கண் நின்றொழுகு வான்" (திருக்குறள், பா.1197)

என்னும் குறட்பாவால் அறியலாம். மேலும்,

> "காமம் வெகுளி மயக்கம் இவையுன்றன்
> நாமம் கெடக்கெடும் நோய். " (மேலது., பா. 360)

என்ற குறட்பாவில் ஒழுங்கீனங்களில் ஒன்றாகக் காமத்தைக் குறிப்பிடுகின்றது. காமத்தை உருவாக்கும் காமன் என்னும் தெய்வத் தொன்மத்தை அற இலக்கியங்கள் தவிர்த்துள்ளன. காமத்தைக் காமனோடு இணைத்துப் பேசாமல் காம உணர்வாக மட்டும் பேசியிருக்கின்றன. காம உணர்வால் ஏற்படும் தீமைகளைச் சுட்டுமிடத்தில் மட்டும் இச்சொல் கையாளப்பட்டுள்ளது. மனித மனத்தைக் காமம் கெடுப்பதாலும், பிறன்மனை நோக்குதலைத் தடுக்கவும் அற இலக்கியங்கள் காமத்தைக் கண்டித்தே பாடியுள்ளன. மேலும், களப்பிரர் காலத்தில் காமன் இந்திரன் வடிவம் கொண்டமையால் காமனைப் பாடாது இந்திரனைப் போற்றியுள்ளன. இப்பின்னணியில்தான் காமம் குறித்த பதிவுகளை அற இலக்கியங்களில் காண முடிகின்றது.

காமத்தை அழகுணர்ச்சி கூட்டும்

மனிதனுக்கு அழகுணர்ச்சி கூடாது. அது காம உணர்ச்சியை ஏற்படுத்தும் என்று அற இலக்கியங்கள் கூறியுள்ளன. நாலடியார் காமன் தொன்மத்தைக் காமம் என்று இணைத்துப் பேசுகையில் அழகுணர்ச்சியைக் கண்டித்துள்ளது.

> "தோற்போர்வை மேலும் துளைபலவாய் பொய்ம்மறைக்கும்
> மீப்போர்வை மாட்சித்து உடம்பானால் மீப்போர்வை
> பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
> பைம்மறியாப் பார்க்கப் படும். " (நாலடியார், பா.42)

என்னும் பாடலில் அழகுணர்ச்சி காமத்தை உண்டுபண்ணக்கூடியது என்றும் ஆகையால், உடலை விரும்பும் காமம் கூடாது என்றும் கூறுகின்றது. மீப்போர்வை என்னும் சட்டை

அணிவதைக் கண்டிக்கிறது. மற்றொரு பாடலில், அறிவுடையார் காம நினைவுக்கு ஆட்பட மாட்டார்; அங்ஙனம் ஆட்பட்டால் வெட்கம் கொள்வர் என்றும் கூறுகின்றது. அதனை,

"பரவா, வெளிப்படா, பல்லோர்கண் தங்கா;
உரவோர்கண் காமநோய் ஓ!ஓ! கொடிதே;
விரவாருள் நாணுப் படலஞ்சி யாதும்
உரையாதுள் ஆறி விடும்." (மேலது., பா.88)

என்னும் பாடலால் அறியலாம்.

காமத்தை அறிவுடையார் விரும்பார்

மனிதனுக்குள் காமநோய் தோன்றிய பிறகு அதனை அழிக்கவோ மறைக்கவோ முடியாது; அது மனத்தை உடைக்கும் இயந்திரம் போல் இயங்கும் தன்மையுடையது; காமம் தீயினும் கொடியது என்று களப்பிரர் காலம் கருதியுள்ளது. அதனால், அற இலக்கியங்கள் காமத்தைக் கடிந்துள்ளன. மேற்கண்ட கருத்தை,

"ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருள் குளித்தும் உயலாகும்; - நீருள்
குளிப்பினும் காமம் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினும் காமம் சுடும்." (மேலது., பா.90)

என்னும் பாடல் வழிக் கூறியுள்ளது. இங்ஙனம் காமனால் விளைவிக்கப்படும் காமம்தான் பிறன்மனையை நோக்க வைக்கிறது, ஆகையால், மக்கள் காமத்திற்கு ஆட்படாமல் ஒதுக்கி வைக்க வேண்டும் என்று அற இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.

காமம் மனித இயற்கை என்றாலும் அறிவுடையார் காமத்தை வெளிக்காட்ட மாட்டார்கள் என்றும், தன் மனைவியிடத்தும் வெளிக்காட்டுவதற்கு வெட்கப்படுவர் என்றும் அற இலக்கியங்கள் கூறியுள்ளதால், களப்பிரர் காலம் காமத்தை வெறுத்து ஒதுக்கியுள்ளது எனலாம். காதல் என்னும் காமத்தை மூடர் தான் விரும்புவர். அறிவுடையார் விரும்ப மாட்டார்கள் என்று திரிகடுகத்தின்,

"பெருமை உடையார் இனத்தின் அகறல்,
உரிமையில் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்,
விழுமிய அல்ல துணிதல், - இம்மூன்றும்
முழுமக்கள் காத லவை." (திரிகடுகம், பா.9)

என்னும் பாடலால் விளக்குகின்றது. காமத்தைச் சான்றோர் விரும்பார் என்றும் (ஏலாதி, பா. 29) காம விளையாட்டில் களித்திருக்க மாட்டார் என்றும் (ஏலாதி, பா. 58) ஏலாதியும் கூறியுள்ளது.

காமத்தை விரும்பும் பெண்டிர் விடம்

காமத்தை விரும்பும் ஆண்களைக் கண்டிப்பதைப் போல் பெண்களையும் அற இலக்கியங்கள் கடிந்துள்ளன. ஆதிக்கச் சமூகமாக இருந்த களப்பிரர் காலம் பெண்களை அடிமைகளாகவே வைத்திருந்தது. சமயங்கள் பெண்களை ஒதுக்கியுள்ளன. காமத்தைக் காமன் என்னும் தெய்வம் தருவதாகச் சங்க காலம் நம்பியதை, அற இலக்கியங்கள் பேசாமல் பெண்களால்தான் காமத்திற்குச் சான்றோர்களும், அறிஞர்களும் ஆட்படுவதாகத்

தெரிவித்துள்ளன. அந்தவகையில் காமத்தை வழங்கும் பெண்கள் நஞ்சிற்கு இணையானவர்கள் என்று இனியவை நாற்பது கூறுகின்றது. அதனை,

"இளமையை மூப்பு என்று உணர்தல் இனிதே;
கிளைஞர்மாட்டு அச்சு இன்மை கேட்டல் இனிதே;
தட மென் பணைத்தோள் தளிர் இயலாரை
விடம் என்று உணர்தல் இனிது." (இனியவை நாற்பது, பா.37)

என்னும் பாடலால் அறிய முடிகின்றது.

காமம் வீடுபேற்றைத் தடுக்கும்

மனிதப் பிறப்பின் நோக்கம் வீடுபேறு. வீடுபேற்றை அடையும் வழியைச் சிந்திப்பதே வாழ்க்கை என்னும் கொள்கை களப்பிரர் கால சமயங்களால் முன்வைக்கப்பட்டன. வீடுபேற்றுப் பயணத்திற்கு இடையூறு விளைவிக்கும் பகையாகக் காமத்தை அடையாளப்படுத்தும் அற இலக்கியங்கள், அதனை ஒதுக்கி வைக்க வலியுறுத்துகின்றன. காமம் மனத்தின் அமைதியைக் கெடுத்து ஆசையை உண்டாக்கக் கூடியது; தனக்கான ஆயுதத்தைத் தானே உருவாக்கிக் கொள்வதற்குச் சமமாகும்; இத்தகைய எண்ணங்கள் மனிதனின் வீடுபேற்றை வேரறுக்கும் சக்தி படைத்தவைகளாகும். இக்கருத்தை,

"குழித்துழி நிற்பது நீர்; தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம்; - அழித்துச்
செறுவழி நிற்பது காமம்; தனக்கு ஒன்று
உறுவுழி நிற்பது அறிவு." (நான்மணிக்கடிகை, பா.28)

என்னும் நான்மணிக்கடிகை பாடல் குறிப்பிடுகின்றது. அங்ஙனம் காமத்தை வெறுக்காமல் இருந்தால் மறுபிறப்புக் கிடைக்கும் என்று பழமொழி நானூறு கூறுகின்றது.

"திரியும் இடிஞ்சிலும் நெய்யும் சார்வாக
எரியும் சுடரோர் அனைத்தால் - தெரியுங்கால்
சார்வற ஓடிப் பிறப்பறுக்கும் அஃதேபோல்
நீரற நீர்ச்சார் வறும்." (பழமொழி நானூறு, பா. 219)

என்னும் பாடல் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குணங்களோடு இருந்தால் பிறவி தலையெடுக்கும் என்று கூறுகின்றது. உடலைத் தின்று உயிரைக் குடிக்கும் ஆற்றல் காமத்திற்கே உண்டு என்று இன்னா நாற்பது பதிவு செய்துள்ளது. அதனை,

"ஏமம் இல் மூதூர் இருத்தல் மிக இன்னா;
தீமை உடையார் அயல் இருத்தல் நற்கு இன்னா;
காமம் முதிரின் உயிர்க்கு இன்னா; ஆங்கு இன்னா,
யாம் என்பவரோடு நட்பு." (இன்னா நாற்பது, பா. 24)

என்ற பாடல் வழி அறியலாம். மேலும், வயது முதிர்ந்து உடல் நடுங்கும் நிலையுடைய கிழவன் காமம் கொள்ளுதல் தவறு என்று முதுமொழிக் காஞ்சி கூறியுள்ளது.

"மிகமூத்தோன் காம நல்கூர்த் தன்று" (முதுமொழிக்காஞ்சி, 9:2)

என்னும் அடி அதனை உணர்த்தும். களப்பிரர் காலச் சமயங்கள் ஆண்களுக்கு மட்டுமே வீடுபேறு உண்டு என்ற கொள்கை கொண்டிருந்தன. அதனால், ஆண்கள் எவ்வயதிலும்,

எந்நிலையிலும் ஆட்பட்டுவிடக் கூடாது; காமத்திற்கு ஆட்பட்டால் வீடுபேறு அடையாமல் மறுபிறவி எடுக்க நேரிடும் என்று அற இலக்கியங்களும் பேசியுள்ளன. சங்க அக இலக்கியக் கொள்கையான 'ஏழு பிறவி' கருத்தியலோடு, காமம் இருந்தால் வீடுபேறு கிடையாது என்ற கோட்பாட்டை ஒப்பிட்டால் உண்மை விளங்கும்.

காமத்தை அடக்கினாலும் வெளிப்படும்

காமம் இயற்கை உணர்வு; அடக்கி வைத்தாலும் வெளிப்படும். ஆகையால், மனதாலும் காம எண்ணம் பிறக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான்மணிக்கடிகை பல பாடல்களில் வலியுறுத்துகின்றது. இச்செய்திகளை,

"செறுவழி நிற்பது காமம்; தனக்கு ஒன்று
உறுவுழி நிற்பது அறிவு." (நான்மணி., பா. 28)
'மறைக்க மறையாதாம், காமம்; முறையும்
இறை வகையான் நின்றுவிடும்." (மேலது.,பா.39)
"... ... காமம்; கரப்பினும்,
கொன்றான்மேல் நிற்கும், கொலை." (மேலது., பா.89)

என்னும் பாடல்கள் வழி அறியலாம். மனம் தான் காமம் தோன்றுவதற்கான அடிப்படை என்பதால் மனதிலும் காமம் தோன்ற கூடாது என்றும், மனத்தால் நினைத்தாலும் பாவம் என்றும் அற இலக்கியங்கள் பேசியுள்ளன. உடலைச் சார்ந்து மனம் இயங்குவதால், உடலை உறுதி செய்யும் உணவையும் அச்சமயங்கள் கடிந்துள்ளன.

காமத்தைப் போற்றும் வள்ளுவம்

அற இலக்கியங்களில் ஒன்றான திருக்குறள் அறத்துப்பால், பொருட்பாலில் காமத்தைக் கண்டிக்கின்றது. ஆனால், காமத்துப்பாலில் போற்றுகின்றது. பல அதிகாரங்களின் வழிக் காமத்தின் திறனையும் இனிமையையும் பேசியிருக்கின்றது. மேலும், ஆண் பெண் வாழ்க்கைக்கான அடிப்படையே காமம்தான் என்றும் கூறுகின்றது. காமத்தில் ஒழுக்கம் பேணப்படல் வேண்டும் என்றும், நெறியுடன் இருக்கும் பெண்களைப் போற்றி, ஒழுக்கம் மீறும் ஆண்களைக் கடிந்துரைக்கின்றது.

"உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது." (திருக்குறள், பா.1201)

"காமக் கடும்புனல் உய்க்கும் நாணொடு
நல்லாண்மை என்னும் புணை." (மேலது., பா.1134)

"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு." (மேலது., பா.1281)

"உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது." (மேலது., பா.1326)

"மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்." (மேலது., பா.1289)

இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023
பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

போன்ற குறட்பாக்களை நோக்கினால் மேற்கண்ட கருத்துக்கள் விளக்கம் பெறும். அற இலக்கியங்கள் காமத்தை முழுமையாக ஒதுக்க, வள்ளுவம் போற்ற வேண்டிய இடத்தில் உயர்த்திப் பிடித்துள்ளது. சமூகத்தை நெறிப்படுத்த எண்ணிய வள்ளுவர், சமூக நடத்தைகளை நெறிப்படுத்த எண்ணியுள்ளாரே தவிர, காமத்தை முழுமையாக விட்டுவிட வேண்டும் என்று கூறவில்லை. மேலும், ஒத்த அன்புடைய காதல் வாழ்க்கையையும் போற்றி, காமநெறி தவறும் ஆண்களையும் பெண்களையும் கண்டிக்கவும் செய்கிறார்.

முடிவுரை

காமம் என்பது மனித வாழ்வின் அடிப்படை. அதனைத் தவறான வழியில் பெறுகிற போது சமூகத்தில் சிக்கல்கள் ஏற்படும். காமம் இதயத்தைத் துளைக்கும் அம்பு; அறிவைக் கெடுக்கும் ஆயுதம்; அறத்தை அழிக்கும் சாதனம்; மக்கள் மனதில் உலா வரும் தீய சக்தி என்று களப்பிரர் கள சமயங்கள் கூறியுள்ளன. இவ்வேட்கையை அடக்கி அறமான செயல்களைச் செய்து வாழவே 'காமன்' என்னும் தொன்மத்தை அற இலக்கியங்கள் தவிர்த்துக் காமத்தை மட்டும் முன்னிறுத்தியுள்ளன. காமம் தீயவற்றையே தனது பிறப்பிடமாகக் கொண்டு நிற்கும் இயல்புடையது என்பதால், அதனைக் களைந்து அறத்துடன் வாழ்ந்தால் மட்டுமே இப்பிறப்பில் வீடுபேறு அடைய முடியும் என்றும், வீடுபேறு அடைவதற்கான தகுதியைப் பெற முடியும் என்றும் அற இலக்கியப் புலவர்கள் கூறியுள்ளனர். வள்ளுவர் காமத்தைக் கண்டிக்க வேண்டியிடத்தில் கண்டித்து, போற்ற வேண்டிய இடத்தில் போற்றியிருக்கிறார். அற இலக்கியங்கள் காமத்தைக் காமன் விளைவிப்பதாகவோ, காமனைத் தெய்வமாகவோ பேசவில்லை. ஆனால், காமத்தை அனைத்து அற இலக்கியங்களும் கீழ்மையாகப் பேசியிருக்கின்றன. காமனின் மறுவடிவமாகக் கருதப்படும் இந்திரன் தொன்மம் இவ்விலக்கியங்களில் உயர்வாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

துணைநூற்பட்டியல்

1. சங்க இலக்கியங்கள் (2004) சென்னை: NCBH.
2. அரிச்சந்திரபுராணம் (1963) இலங்கை: தமிழ்நூற் பதிப்பகம்.
3. சிலப்பதிகாரம் (2014) சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.
4. மணிமேகலை (2005) சென்னை: பாரி நிலையம்.
5. சீவகசிந்தாமணி (2007) சென்னை: சீதை பதிப்பகம்.
6. கம்பராமாயணம் (2009) சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
7. இறையனார் களவியல் (2007) சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.
8. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (2007) சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
9. அறவாணன், க.ப., (2008) அற இலக்கியக் களஞ்சியம், சென்னை: தமிழ்க் கோட்டம்.
10. பிரேம்குமார், (2004) மன்மதன் ஒப்பாரி, சென்னைப் பல்கலைக்கழகம்.
11. சதிஷ்,அ., (2005) காமன் கதைப்பாடல், சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்.
12. எஸ்.சாந்தினிபீ, (வரலாற்றுத் துறைப் பேராசிரியர்) காமன் விழா: தமிழர்கள் கொண்டாடிய காதலர்கள் தினம், சென்னை: இந்து தமிழ், 14 பிப். 2019.
13. சந்திரசேகரன், இரா., (ப.ஆ.) (2003) நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும், கோவை: பாரதியார் நூலகம்.